©
GOVERNMENT OF TAMIL NADU
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 3.20 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 30A]

சென்னை, புதன்கிழமை, பிப்ரவரி 6, 2013
தை 24, நந்தன, திருவள்ளுவர் ஆண்டு - 2044

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

*பக்கங்கள்*

**சட்டமுன்வடிவுகள் :**

எண் 1/2013—அண்ணா பல்கலைக்கழக (திருத்தம்) சட்டம் .. 2–3

எண் 2/2013—தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நலநிதியத் (திருத்தச்) சட்டம் .. 5–6

2013—ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 6—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2013.**

***1978ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபத்து நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச்சட்டம், 2013ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தம்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1978.

11 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் 11 ஆம் பிரிவில், 3 ஆம் உட்பிரிவின் இரண்டாவது வரம்புரையில் ‘‘அறுபத்து ஐந்து வயது’’ என்ற சொற்றொடருக்கு பதிலாக ‘‘எழுபது வயது’’ என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

## நோக்க காரண விளக்கவுரை.

1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30 /1978) 11ஆம் பிரிவின் மூன்றாம் உட்பிரிவிற்குரிய இரண்டாம் வரம்புரையின்படி துணைவேந்தராக நியமிக்கப்பட்ட நபர் ஒருவர், அவருடைய பதவிக் காலத்தின் போது அவர் அறுபத்து ஐந்து வயதினை நிறைவெய்துவாராயின், பதவியிலிருந்து ஓய்வு பெறுதல் வேண்டும். தற்போது, அரசானது, கல்வியாளர் பெறும் அறிவானது இம்மாநிலத்தில் பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் அதற்கு தொடர்புடைய அறிவியல் சார்ந்த உயர்கல்வியை வளம்பெறச் செய்வதற்காகப் பயன்படுத்துவதற்கு இயலும் வகையில், 2009 ஆம் ஆண்டு மைய பல்கலைக்கழகங்கள் சட்டத்திற்கு (மையச் சட்டம் 25/2009) இணையாக, அண்ணா பல்கலைக்கழக துணை வேந்தரின் ஓய்வு பெறும் வயதினை அறுபத்தைந்திலிருந்து எழுபது வயதிற்கு உயர்த்துவதற்கு மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம், 30/1978ஐ திருத்துவதென முடிவு செய்தது.

2. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**பி. பழனியப்பன்,**
*உயர்கல்வித் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

2013–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 6–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2013.**

**1987–ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதியச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக :-

**1.** (1) இந்தச் சட்டம், 2013–ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நலநிதியத் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 49/ 1987. **2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக்குறிப்பிடப்படுவதான) 1987–ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்களின் நலநிதியச் சட்டத்தின் 15–ஆம் பிரிவில்,– 15–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (3)–ஆம் பிரிவில் “இருநூறு ரூபாய்” எனும் சொற்றொடருக்குப் பதிலாக, “ஓர் ஆயிரம் ரூபாய்” என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (4)–ஆம் உட்பிரிவில்,

*(i)* (a) எனும் இனத்தில் “ஒருநூறு ரூபாய்” எனும் சொற்றொடருக்குப் பதிலாக “ஐநூறு ரூபாய்” என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

*(ii)* (b) எனும் இனத்தில் “இருநூறு ரூபாய்” எனும் சொற்றொடருக்குப் பதிலாக “ஓர் ஆயிரம் ரூபாய்” என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

*(iii)* (c) எனும் இனத்தில் “பத்தாயிரம் ரூபாய்” எனும் சொற்றொடருக்குப் பதிலாக “இருபத்தைந்தாயிரம் ரூபாய்” என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

*(iv)* (d) எனும் இனத்தில் “இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய்” எனும் சொற்றொடருக்குப் பதிலாக “பத்தாயிரம் ரூபாய்” என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 16–ஆம் பிரிவில் (5) ஆம் உட்பிரிவில் மற்றும் அவற்றிற்கான வரம்புரையில் “இரண்டு இலட்சம் ரூபாய்” எனும் சொற்றொடருக்குப் பதிலாக “ஐந்து இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபாய்” என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 16–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 23–ஆம் பிரிவில் (1)–ஆம் உட்பிரிவில் “பத்து ரூபாய்” எனும் சொற்றொடருக்குப் பதிலாக “முப்பது ரூபாய்” என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 23–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**நோக்க—காரண விளக்கவுரை**

1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதியச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 49/1987) வழக்குரைஞர்கள் பயனுக்காக மற்றும் நிதியத்தின் உறுப்பினர் இறந்து போவதன் அடிப்படையில் அல்லது வழக்குரைஞர் தொழிலைச் செய்து வருகையில் இடைநிறுத்தத்தின்போது நிதியத்திலிருந்து பெறக்கூடிய தொகையின் செலுத்தத்திற்காக நல நிதியமொன்றினை அமைப்பதற்கு வகை செய்கிறது.

2. தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்குரைஞர் கழகம், வழக்குரைஞர் கழகத்தின் உறுப்பினர் இறப்பின் போது தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதியத்தின் உறுப்பினர் ஒருவரின் பெயர் குறிப்பிடப்பட்டவருக்கு அல்லது சட்ட முறையான வாரிசுதாரருக்கு செலுத்தும் நிதி உதவியை அதிகரிப்பதற்கு அதனை இரண்டு லட்சம் ரூபாயிலிருந்து ஐந்து இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபாயாக மாற்றி அமைத்திருக்கிறது. எனவே, இதற்காக ஆகும் மேலுமான செலவினை சரிக்கட்டுவதற்கு வழக்குரைஞர்கள் கழகம், வழக்குரைஞர் நல நிதிய முத்திரைத்தாள் மதிப்பை, உறுப்பினர் சேர்க்கைக் கட்டணத்தை, ஆண்டுச் சந்தாவை மற்றும் வாழ்நாள் முழுவதற்குமான சந்தாவை அதிகரிக்குமாறு பரிந்துரைத்தது. எனவே, அரசானது பரிந்துரைகளை ஏற்று மேற்சொன்ன 49/1987 எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தை தக்கவாறு திருத்துவது எனவும் முடிவு செய்துள்ளது.

3. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவுகளுக்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**என். ஆர். சிவபதி,**
*பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும்*
*இளைஞர் நலன், சட்டம்,*
*நீதிமன்றங்கள் மற்றும்*
*சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.